**செ.வெ.எண்:** **நாள்:11.02.2020**

## நாமக்கல் மாவட்டம்

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பை நீச்சல் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ் இ.ஆ.ப அவர்கள் தொடங்கி வைத்தார்.

-------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதான நீச்சல் குளத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பை நீச்சல் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ் இ.ஆ.ப அவர்கள் இன்று (11.02.2020) தொடங்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளையொட்டி இன்றைய தினம் (11.02.2020) தடகளம் (ஆண்கள்) : 100 மீ, 200 மீ, 400 மீ, 400 மீ தடை ஓட்டம், 1500 மீ, 10000 மீ, போல் வால்ட், நீளம் தாண்டுதல், சுத்தி எறிதல், ஈட்டி எறிதல், தடகளம் (பெண்கள்) : 100 மீ, 200 மீ, 800 மீ, 1500 மீ, 5000 மீ, போல் வால்ட், நீளம் தாண்டுதல், சுத்தி எறிதல், ஈட்டி எறிதல் உள்ளிட்ட தடகள போட்டிகள் நாமக்கல் செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடைபெற்றன.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதான நீச்சல் குளத்தில் நீச்சல் (ஆண்கள்) : 100 மீ பேக் ஸ்ட்ரோக், 100 மீ ப்ரஸ்ட் ஸ்ட்ரோக், 100 மீ பட்டர்பிளை, 200 மீ பட்டர்பிளை, 200 மீ பேக் ஸ்ட்ரோக், 200 மீ ப்ரஸ்ட் ஸ்ட்ரோக், 400 மீ இன்டுவிஜீவல் மெட்லி, மற்றும் 1500 மீ ப்ரீ ஸ்டைல்., நீச்சல் (பெண்கள்) : 100 மீ பேக் ஸ்ட்ரோக், 100 மீ ப்ரஸ்ட் ஸ்ட்ரோக், 100 மீ பட்டர்பிளை, 200 மீ பட்டர்பிளை, 200 மீ பேக் ஸ்ட்ரோக், 200 மீ -ப்ரஸ்ட் ஸ்ட்ரோக், 400 மீ இன்டுவிஜீவல் மெட்லி, மற்றும் 800 மீ ப்ரீ ஸ்டைல் ஆகிய போட்டிகள் இன்று நடைபெற்றன. இந்த போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ் இ.ஆ.ப அவர்கள் தொடக்கி வைத்தார்.

முன்னதாக, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதான உள்ளரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பை இறகு பந்து விளையாட்டு போட்டிகளை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்கா மூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை, மண்டல முதுநிலை மேலாளர் திரு.எம்.இராம சுப்ரமணிய ராஜா மற்றும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.க.அனந்த நாராயணன் அவர்கள் உட்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.